2. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விவர அறிக்கை.

* திரு எஸ். இராகவானந்தம்: மாற்றுத் தலைவர் அவர்களே, 28-2-1978 அன்று வினா எண் 217 (124) தொடர்பாக விடையளிக்கப்பட்டபோது, திருவாளர்கள் ஆ. பாலசுப்ரமணியம் மற்றும் திரு. வி. ஆர். பெரியண்ணன், எம்.எல்.சி., அவர்கள் எழுப்பிய துணை வினாக்களுக்கு விடை அளிக்கையில் நான் "சேந்தமங்கலம் திட்டம் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது, ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொள்ளப்படும்" என்றும், "நாமகிரிப்பேட்டைத் திட்டம் ரூ. 54,000 செலவில் நிறைவேற்றப்படுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கொண்டு தேவைப்படும் வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும். இந்தத் திட்டம் பற்றி இன்வெஸ்டிகேஷன் முடிந்து விட்டது. அரசாங்கத்தினுடைய அப்ரூவலும் கிடைத்திருக்கிறது. எனவே, இனிமேல், வேலை துவங்கப்படும்" என்றும் கூறினேன். ஆனால் பின்பு கோப்பினை விரிவாக ஆராய்ந்ததில் மேற்படி விடையைக் கீழ்க்கண்டவாறு திருத்திக் கொள்ள விழைகிறேன்—

சேந்தமங்கலம் திட்டம்.—இது குடிநீர் வடிகால் வாரியத்தால் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும். ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொள்ளப்படும்.

நாமகிரிப்பேட்டைத் திட்டம்.—இந்தத் திட்டம் ரூ. 54,000 செலவில் நிறைவேற்றப்படுவதற்கு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கொண்டு தேவைப்படும் வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும்.

3. அரசின் தீர்மானங்கள்.

(1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு க. இராசா முகமது: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1978-79 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"
என்று முன்மொழிகிறேன்.

1978 செப்டம்பர் 7]

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): அவை முன் உள்ள பிரச்சினை:

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1978-79 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2(1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1978-79 ஆம் நிதியாண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. அதற்கு மாண்புமிகு தலைவர் அவர்களால் கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரல் வரையறுக்கப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற்கான நாளும், நேரமும்—9-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்களைச் சரிபார்ப்பதற்கான நாளும், நேரமும்—9-9-1978 மாலை 6 மணி.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும்—11-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(2) அவைக்குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு க. இராசா முகமது: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியை யொட்டி 1978-79 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்று முன்மொழிகிறேன்.